முகவுரை

வேதம் ஓர் அறிவுக்களஞ்சியம் **(A body of knowledge).** ரிஷிகள் மூலமாக இறைவனாலேயே வெளிப்படுத்தப்பட்டதே வேதம் என்று, மரபில் வந்தோர் வேதத்தை நோக்குகின்றனர். நாம் வாழ்வில் எவற்றையெல்லாம் அடையலாம் என்ற நம் லக்ஷ்யங் களைப் பற்றிய அறிவைக் கொடுத்தும் அந்த லக்ஷ்யங்களை அடைவதற்கான பாதைகளின் அறிவைக் கொடுத்தும் நம் வாழ்வை வேதமானது பயனுடையதாக்குகிறது.

நமது அனைத்து லக்ஷ்யங்களும் நான்காகப் பிரிக்கப்படுகின்றன.

1. அர்த்தம் - **अर्थः**
2. காமம் - **कामः**
3. தர்மம் - **धर्मः**
4. மோக்ஷம் - **मोक्षः**

அர்த்தம் என்பது நம்முடைய பாதுகாப்பிற்காகப் பயன்படும் பொருள்கள். உடலும் மனமும் வருந்தாது இருக்க நாம் சேர்க்கும் உடைமைகள் அர்த்தம் எனப்படும். மனிதன் மனதில் உதிக்கும் முதல் லக்ஷ்யம் இதுவே. உடலும் மனமும் வருந்தாது பாதுகாக்க அர்த்தம் பயன்படுகிறது.

காமம் என்பது இன்பத்திற்காகப் பயன்படும் பொருள்கள். உடலும் மனமும் இன்புற்றிருக்க நாம் சேர்க்கும் பொருள்கள் காமம். இது, தன்னைப் பாதுகாத்தபின் மனதில் அடுத்து உதிக்கும் லக்ஷ்யம். உடலுக்கும் மனதிற்கும் இன்பத்தைக் கொடுக்க காமம் பயன் படுகிறது. அர்த்தத்தின் பலன் துக்கநிவ்ருத்தியும் காமத்தின் பலன் ஸுகப்ராப்தியும் ஆகும். உதாரணமாக பசியை நீக்க நாடும் உணவுப் பொருள் அர்த்தம். சுவைக்காக நாடும் உணவுப்பொருள் காமம்.

தர்மம் என்பது புண்யம். கண்ணிற்குத் தெரியாத இந்தப் புண்யமானது வேதத்தில் கூறிய கர்மங்களைச் செய்வதாலும் தர்மத்திற்கு முரணாகாத செயல்களாலும் அடையப்படுகிறது. இவ்வாழ்விலும் வரப்போகும் வாழ்விலும் துயரத்தை நீக்கவும் ஸுகத்தை அடையவும் புண்யமானது பயன்படுகிறது.

கர்மகாண்டம் என அழைக்கப்படும் வேதத்தின் முதல்பாகம், அர்த்த-காம-தர்மங்களை அடையப் பலவித உபாயங்களைப் பற்றிக் கூறுகிறது. உபாயங்களைக் கூறிய போதிலும் அதே வேதம் இறுதியில் இம்மூன்றிலும் உள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டுகிறது. இம்மூன்றின் மூலமாக மனிதர்கள் இன்பத்தைத் துய்க்க நாடிக்கொண்டு இருக்கிறார்கள். இன்பமே மனிதர்களின் முடிவான இலக்காகத் தோன்றும்பொழுது இன்பத்தில் உள்ள குறைகளை இவ்விதம் கூறுகிறது:

1. ஒவ்வொரு இன்பத்திலும் துன்பம் கலந்தே உள்ளது. இன்பத்தைத் தரும் பொருளை அடைதல், அவற்றைப் பாதுகாத்தல், அவற்றின் இழப்பு முதலிய காரணங்களால் அனைத்து இன்பங்களும் துயரத்துடன் கலந்ததாகவே உள்ளன.

2. எந்த இன்பமும் மனதில் முழு நிறைவைக் கொடுப்பதில்லை.

3. அனைத்து இன்பங்களும் பொருள்களைச் சார்ந்திருக்கச் செய்து நம்மை அடிமையாக்குகின்றன.

இவ்விதம் நமக்கு குறைகளைக் காட்டி, இக்குறைகளற்ற மோக்ஷம் என்ற லக்ஷ்யத்தை நமக்கு வேதம் அறிமுகப்படுத்துகிறது. அந்த மோக்ஷத்தை அடையப் பாதையையும் காட்டித்தருகிறது.

மோக்ஷம் என்பதுதான் மனிதனின் உண்மையான, மேலான லக்ஷ்யம். மோக்ஷம் என்பது முழு மனநிறைவை அடைதல். நம் மிடத்திலேயே முழு நிறைவைக் காணுதல். மோக்ஷத்தை அடைவதன் மூலம் அர்த்த, காம, தர்மங்களுக்கு நாம் அடிமைப்படாமல் அவை தேவை என்ற நிபந்தனைகளிலிருந்து விடுபடுகிறோம். அவை நமக்கு ஆடம்பரப் பொருள்கள் போல் ஆகின்றன. எந்த

நிபந்தனையுமின்றி மனதில் நம்மால் அறியப்படும் நிறைவே மோக்ஷமாகிறது. மோக்ஷமே வேதத்தின் கடைசிப் பகுதியிலிருந்து கிடைக்கும் அறிவின் பலன்.

வேதத்தின் கடைசிப் பகுதியானது வேதாந்தம், ஞான காண்டம், உபநிஷத் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. வேதத்தின் கடைசிப் பகுதியில் அமைந்ததால் வேதாந்தம் எனவும் மெய்ப் பொருளைப் பற்றிய அறிவை மையமாகக் கொண்டதால் ஞானகாண்டம் எனவும் ஸம்ஸாரத்தை நீக்கும் மெய்ப்பொருளைப் பற்றிய ஞானம் என்ற பொருளைக்கொண்டதால் உபநிஷத் எனவும் பெயர் பெற்றுள்ளது. உபநிஷத் என்ற சொல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பொருள் கொள்ளப்படுகிறது.

उप - உப - குருவின் அருகே செல்லுதல்

नि - நி - மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்தை அடைதல்

षत् - ஷத் - துயரத்தை நீக்குதல்

குருவை அடைந்து பெறப்பட்ட, ஸந்தேஹமற்ற எந்த ஞானத்தினால் ஒருவன் துயரத்திலிருந்து விடுபடுகிறானோ, அந்த ஞானமே உபநிஷத். அப்படிப்பட்ட ஞானத்தைக் கொடுக்கும் நூலையும் உபநிஷத் என்று அழைக்கிறோம்.

மோக்ஷம் என்ற லக்ஷ்யத்தை அடைவதற்காக ஒருவனுடைய உண்மையான தன்மையை வேதாந்தம் எடுத்து விளக்குகிறது. எப்பொழுதும் பந்தப்படாத தன் உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதன் மூலமே மோக்ஷத்தை அடையமுடியும் என்பதால் ஆத்ம ஞானம் உபாயமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆத்ம ஞானத்தை நமக்குக் கொடுக்க வேதாந்தம் சில முறைகளைக் கையாளுகிறது. குருவின் துணைகொண்டு வேதாந்தத்தைப் பயன்படுத்தும் பொழுதுதான் நாம் முழுப்பலனை அடையமுடியும். ஆகவே ஞானத்திற்குக் கருவியாக விளங்கும் வேதாந்தம் எவ்வளவு முக்கியமோ அதே அளவு குருவும் முக்கியமாகிறார்.

உபநிஷத் பொதுவாக குரு-சிஷ்யனின் உரையாடலாக அமைந்திருக்கும். ஒன்று அல்லது பல உரையாடல்கள் சேர்ந்து ஒரு உபநிஷத் ஆகும். ஒவ்வொரு வேதத்தின் கடைசியிலும் பல உபநிஷத்துக்கள் உள்ளன.

அவற்றில் இங்கு ஏழு உபநிஷத்துக்களின் சாரம், மூலம், எழுத்துப் பெயர்ப்பு, சொற்பொருள், மொழிபெயர்ப்பு, ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.